


இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (02.07.2024) சென்னையில் “TNRISE” தமிழ்நாடு ஊரகதொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்கு நிறுவனத்தினை துவக்கி வைத்து, அந்நிறுவனத்தின் இலச்சினையை (Logo) வெளியிட்டார். இந்நிகழ்வின் போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மைச் செயல் அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர்/ வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் திருமதி. ஸ்ரேயா பி.சிங், சமிக்கந்தர்தாஸ் (Task Team Leader, The World Bank). முதன்மைச் செயல் அலுவலர் திருமதி. உமாமகேஸ்வரி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (02.07.2024) சென்னையில் “TNRISE” தமிழ்நாடு ஊரக தொழில்காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்கு நிறுவனத்தினை துவக்கி வைத்து, அந்நிறுவனத்தின் இணையதள (www.tnrise.co.in) செயல்பாட்டினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மைச் செயல்அலுவலர் திருமதி. ச. திவ்யதர்சினி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர்/ வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் திருமதி. ஸ்ரேயா பி.சிங், சமிக்சுந்தர்தாஸ் (Task Team Leader, The World Bank), முதன்மைச் செயல் அலுவலர் திருமதி, உமாமகேஸ்வரி மற்றும் உயர்அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழ்நாட்டில்தான் மகளிர் தொழில்முனைவோர் அதிகம் எனும் நிலையை உருவாக்குவோம்!

## புத்தொழில் உருவாக்க நிறுவன தொடக்க விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, ஜூலை 4-**

**சென்னை, கிண்டியில் TN - RISE எனப்படும், தமிழ்நாடு ஊரகத் தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்க நிறுவனத்தின் தொடக்க விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.**

**அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பாக, `வாழ்ந்து காட்டுவோம் திட்டம்-2.0' மூலம் TN-RISE நிறுவனத்தைத் தொடங்கி வைப்பதில் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

மக்கள்தொகையில் சரிபாதி இருக்கக்கூடிய பெண்கள், முன்னேற்றம் அடையாமல் எந்தவொரு நாடும் வளர்ச்சிப் பெற முடியாது. எனவேதான், பெண்களை எல்லா வகையிலும் முன்னேற்றும் அரசாக, நம் திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகின்றது.

### முதலமைச்சரின் உயரிய நோக்கம்!

அதிலும் குறிப்பாக, கிராமங்களில் உள்ள பெண்களின் முன்னேற்றம் என்பது மிக மிக முக்கியமானது. கிராமங்களில் இருக்கக்கூடிய பெண்களும் பெரிய தொழில் முனைவோராக வளர வேண்டும் என்பது நம் முதலமைச்சரின் உயரிய நோக்கம் ஆகும்.

பெண் தொழில்முனைவோர், நிதிச் சந்தைகள், தொழில் தொடர்புகள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றை எளிதில் பெறுவதற்காக பல சவால்களை, பெண்கள் எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றது.

அதை உணர்ந்த நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், `இந்தத் தடைகளை நீக்குகின்ற வகையில் தான் பிரத்தியேக புத்தொழில் இயக்கம் ஒன்றை, நம் திராவிட மாடல் அரசு உருவாக்கும் எனவும், இந்த இயக்கம் மகளிர் தொழில் முனைவோருக்குத் தேவையான மேம்பட்ட உதவிகளை வழங்கும்' எனவும் சட்டமன்றத்திலே அறிவித்திருந்தார்கள்.

### அடிமைத்தனம் – விடுதலை!

பெண்ணுரிமை குறித்து இந்தியாவில் மட்டுமல்ல, உலகில் வேறு யாரும் சிந்திக்காத விதத்தில் செயல்பட்ட மாநிலம் என்றால், அது தமிழ்நாடுதான். அதை சிந்தித்தவர் தந்தை பெரியார் அவர்கள். பல நிகழ்ச்சிகளில் நான் சொல்வதுண்டு. பெண்கள் இரண்டு விதமாக அடிமைப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். ஒன்று பண்பாட்டு ரீதியான அடிமைத்தனம். இன்னொன்று பொருளாதார ரீதியான அடிமைத்தனம். தமிழ்நாட்டு பெண்கள் பொருளாதார விடுதலை அடைவதற்கு, உலக வங்கி போன்ற நிறுவனங்கள் பேருதவி புரிவதைப்போல, பண்பாட்டு தளத்தில் பெண்கள் விடுதலை அடைவதற்குத் தொடர்ந்து பாடுபட்டு வரும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.




திராவிட முன்னேற்றக் கழக அரசு முதன்முறையாக அமைந்தபோது தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெண்களுக்கு முதன்முதலாக சுயமரியாதைத் திருமணச் சட்டத்திற்கு சட்டபூர்வமான அங்கீகாரத்தை அளித்தார்கள்.

அதைபோல், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் நாட்டிலேயே முதன்முதலாக பெண்களுக்கு சொத்தில் சம உரிமை போன்ற முற்போக்கான சட்டங்களைத் தந்தார்கள்.

### மகளிர் வளர்ச்சித் திட்டங்கள்!

நமது முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்து பயணத் திட்டம், ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம் போன்ற மகளிர் வளர்ச்சிக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளார்கள்.

விளிம்புநிலையில் இருக்கக்கூடிய மக்களை முன்னேற்றுவதற்காக கழக அரசு பல்வேறு திட்டங்களைப் பார்த்து, பார்த்து நிறைவேற்றி வருகின்றது. அந்த வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக மகளிர் சுயஉதவிக் குழுக்களை தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தினார்கள்.

இன்றைக்கு அந்த மகளிர் சுய உதவிக்குழுக்கள் தமிழ்நாடு முழுவதும் பரவி, பெருகி லட்சக்கணக்கான பெண்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளியைத் தந்துக்கொண்டிருக்கிறது.

மகளிர் சுயஉதவிக் குழுக்களின் வளர்ச்சிக்காக திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அதன் பயனை தமிழ்நாட்டின் கடைக்கோடியில் உள்ள சிறு கிராமத்தில் உள்ள பெண்களிடம் கொண்டு சேர்க்கும் பணியினை, நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது.

மகளிர்மேம்பாட்டிற்கான `வாழ்ந்து காட்டுவோம்-2.0 திட்டம்' கிராமப்புறத் தொழில்களை ஊக்குவித்து வருகின்றது. மகளிர் வேலைக்குச் செல்கிறார்கள் என்ற நிலையை மாற்றி அவர்களை நான்கு பேருக்கு வேலை கொடுக்கும் வகையில், தொழில்முனைவோராக உருவாக்குவதற்காகத்தான் இந்த திட்டங்களை கழக அரசு செயல்படுத்தி வருகின்றது.

### புத்தொழில் உருவாக்க நிறுவனம்!

இதன் பயனாகத்தான் இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற மகளிரால் நடத்தப்படும் தொழில் நிறுவனங்களில் 13.5 சதவிகிதம் தமிழ்நாட்டில் இருக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த வெற்றிப்பயணத்தின் மற்றும் ஒரு மைல் கல்லாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு தமிழ்நாடு ஊரகத் தொழில்காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்க நிறுவனத்தை இப்போது தொடங்கி இருக்கின்றது.

தொழில்முனைவோராக வரும் மகளிருக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக இந்த நிறுவனம் இருக்கும். தொழில் செய்வதற்கு ஏற்ற தேவையான நவீன உட்கட்டமைப்பு, உற்பத்தி மேம்பாடு, பேக்கிங், பிராண்டிங், மார்கெட்டிங், நிதி மேலாண்மை, நிறுவன உருவாக்கம், நிறுவன செயல்பாடு என மகளிர் தொழில்முனைவோருக்கான உதவிகளை ஏ டு இசட் வழங்குவதற்காகத்தான் தமிழ்நாடு ரைஸ் நிறுவனம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

> “பண்பாட்டு தளத்தில் பெண்கள் விடுதலை அடைவதற்குத் தொடர்ந்து பாடுபட்டு வரும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்”

உயர்தர சேவைகளைப் பெற தமிழ்நாடு முழுவதும் இருந்து ஏற்கனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட 126 மகளிர் தொழில்முனைவோர்களுக்கும் 80 மகளிர் தொழில் குழு நிறுவனங்களுக்கும் அவர்கள் அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி நகர்ந்திட, இந்த நிறுவனத்தின் மூலம் உரிய ஆலோசனைகள் வழங்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் இதேபோல் நூற்றுக்கணக்கான மகளிர் தொழில் முனைவோர் மற்றும் மகளிர் தொழில் குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, பயன்பெற இருக்கின்றனர் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இத்தகைய தொழில்முனைவோருக்கு வழிகாட்டவும், தேவையான உதவிகளை வழங்கவும், உலகளவில் புகழ்பெற்ற பல்வேறு நிறுவனங்களுடன் இந்த மையம் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்ள உள்ளது.

மகளிர் தொழில்முனைவோருக்குத் தேவையான அனைத்து சேவைகளையும் வழங்கி, அவர்களை இந்திய அளவில் மட்டுமல்லாது, உலக அளவில் வெற்றிகரமான தொழில் அதிபர்களாக உருவாக்கும் முயற்சியில், தமிழ்நாடு ரைஸ் நிறுவனம் இன்று முதல் அர்ப்பணிப்புடன் செயல்படும்.

### இந்தியாவிலேயே சாதனை!

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அதிக மகளிர் தொழில்முனைவோர்களாகவும், தொழில் அதிபர்களாகவும் இருக்கிறார்கள் என்கின்ற வரலாற்றுச் சாதனையை எட்ட, நாம் அனைவரும் சேர்ந்து உழைப்போம்.

எனவே, TN-RISE பயன்படுத்தி தமிழ்நாட்டு மகளிர் தொழில் முனைவோராக வேண்டும் என்று தங்களின் கனவை நனவாக்கி கொள்வதோடு மட்டுமல்லாமல், தங்களது துறையில் வெற்றி பெறவும் சாதனை படைக்கவும் எனது அன்பையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

விழாவில், அரசு ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலர் ககன் சிங் பேடி, கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டி.பி.யாதவ் ஐ.ஏ.எஸ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திவ்யதர்ஷினி ஐ.ஏ.எஸ்., செயல் இயக்குநர் ஸ்ரேயா சிங், ஐ.ஏ.எஸ்., உலக வங்கியைச் சேர்ந்த சமீக் சுந்தர்தாஸ், `வாழ்ந்து காட்டுவோம்' திட்ட கூடுதல் இயக்குநர் அருள்ஜோதி, TN RISE திட்டத்தின் தலைமைச் செயல் அலுவலர் உமாமகேஸ்வரி, தீரஜ் கபூர், எச்.பி.சேல்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மேலாளர் அப்பாதுரை, சிவராஜ் ராமநாதன் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.